Appendix I.

[*Vide* answer to starred question No. 209 of page 136.]

A.—With a view to maintain the price level of vegetables and increase its production by utilising the available waste lands in and around important towns and cities, a scheme for the increased cultivation of vegetables was sanctioned in January 1963 and the same is in operation with effect from 9th January 1963, in and around Madras city and the important towns of Tiruchirappalli, Madurai, Coimbatore and Tirunelveli within a radius of 30 miles of the above places and in the blocks of Munchirai, Tiruvatar, Killiyoor and Melpuram of Kanyakumari district.

2. Under the scheme, vegetable seeds and pesticides are sold to the vegetable growers at 50 per cent concessional rates. Loans are also granted to the extent of Rs. 120 per acre per grower subject to a maximum of Rs. 240 per season on personal surety. The loan amount is recoverable at the time of harvest. The loans are granted by the Block Development Officers in whose jurisdiction, the area is located. Manure mixtures specially compounded to a formula to suit all vegetable crops are also supplied within the loan amount applicable to each growers.

பதில்.—காய்கறிகளின் . விலையேறாமல் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனும் முக்கிய நகரங்களிலும் ஊர்களிலும் உள்ள தரிசு நிலத்தைப் பயன்படுத்தி காய்கறி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் காய்கறியை அதிகமாக உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று 1963 ஜனவரியில் அனுமதிக்கப்பட்டது. இத் திட்டம் சென்னை நகரிலும், அதன் சுற்றுப் புறத்திலும், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 30 மைல் சுற்றளவில் உள்ள இடங்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முன்சிறை, திருவட்டாறு, கிள்ளியூர், மேல்புறம் வட்டாரங்களிலும் 1963-ஆம் வருடம் ஜனவரி மாதம் 9-ந் தேதி முதல் அமலில் இருந்து வருகிறது.

2. இத் திட்டத்தின்கீழ் காய்கறித் தோட்டம் போடுபவர்களுக்குக் காய்கறி விதைகளும், பூச்சிக்கொல்லிகளும் பாதி விலைக்கு வழங்கப்படுகின்றன. தோட்டக்காரர் ஒருவருக்கு ஏகரா ஒன்றுக்கு ரூ. 120 வரை சொந்த ஜாமீனில் கடன் வழங்கப்படுகிறது. பிரதி பருவகாலத்திற்கு அதிகபட்சம் ரூ. 240 வரை கடன் வழங்கப்படுகிறது. அறுவடைக்காலத்தில் கடன் தொகை திருப்பி வசூலிக்கப்படுகிறது. தோட்டம் அமைந்துள்ள பகுதி எந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியின் மேற்பார்வையில் உள்ளதோ அவர் கடன்களை வழங்குகிறார். எல்லாவிதமான காய்கறிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உரக் கலவையும் ஒவ்வொரு தோட்டக்காரருக்கும் வழங்கப்படுகிறது. இதன் விலையும் மேற்படி கடன் தொகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.